## முன்னதாகவே உற்பத்தி தொடக்கம் – கூலி உயர்வு!

# விசைத்தறி நெசவாளர்கள் ‘திராவிட மாடல்’ அரசுக்கு நன்றி!

சென்னை, ஜூலை 5 -

விலையில்லா வேட்டி சேலை உற்பத்தியினை முன்கூட்டியே தொடங்கியுள்ளதற்கும், நெசவு கூலி உயர்வு வழங்கியுள்ளதற்கும், விசைத்தறி நெசவாளர்கள் தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

இதுகுறித்து வெளியான செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழக அரசின் விலையில்லா வேட்டி சேலை உற்பத்திக்கு தமிழக அரசு முன்கூட்டியே அனுமதி வழங்கியதால், விசைத்தறி நெசவாளர்கள் மகிழ்ச்சியுடன் தங்களின் உற்பத்தி பணியினை தொடங்கி உள்ளனர்.

நடப்பாண்டு, முன் எப்போதும் இல்லாத வகையில், முதன் முறையாக, தமிழக அரசின் பொங்கல் இலவச வேட்டி சேலை திட்டத்திற்கு, ஏப்ரல் மாதத்திலேயே அரசாணை வெளியிடப்பட்டு, நூல் கொள்முதல் டெண்டர் பணிகள் முடிக்கப்பட்டு, ஜூன் முதல் வாரத்தில், விசைத்தறி நெசவாளர் கூட்டு றவு சங்கங்களில் உற்பத்தி துவங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசினால், இந்த வருடம் ஒரு கோடியே 14 லட்சம் சேலைகள், ஒரு கோடியே 18 லட்சம் வேட்டிகள் உற்பத்தி செய்ய சங்கங்களுக்கு உற்பத்தி திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

வேட்டி உற்பத்திக்கான தமிழக அரசின் ஆறு கூட்டுறவு நூற்பாலைகளில் இருந்து 40‘s PC நூல்கள் இலவச வேட்டி உற்பத்தி செய்யும் சரகங்களுக்கு, குறிப்பாக பெரும்பாலும் உற்பத்தி செய்யப்படும் ஈரோடு மற்றும் திருச்செங்கோடு பகுதிகளில் உள்ள விசைத்தறி கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு வேட்டி உற்பத்தி செய்ய நூல்கள் வழங்கப்பட்டுள்ளது. இதனை கொண்டு, விசைத்தறிகள் மூலம் வேட்டி உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

மேலும், ரேயான் மற்றும் காட்டன் மார்க்கெட் டிமான்ட் இல்லாத காரணத்தால், பெரும்பாலான விசைத்தறிகளுக்கு உற்பத்தி இல்லாத சூழ்நிலையில், தமிழக அரசு இந்த வருடம் ஜூன் மாதத்திலேயே வேட்டி சேலை உற்பத்தி துவங்க வழிவகை செய்துள்ளதால், விசைத்தறியாளர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் உற்பத்தி தொடங்கியுள்ளனர்.

இலவச வேட்டி சேலை உற்பத்தி மூலம், நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் 2 லட்சம் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழக அரசு நடப்பாண்டு, இலவச வேட்டி சேலை உற்பத்தி திட்டத்தின் கீழ், விசைத்தறி சேலை ஒன்றுக்கு, ரூபாய் 3.75ம், வேட்டி ஒன்றுக்கு, ரூபாய் 2.40ம் நெசவு கூலி உயர்வு வழங்கி, நெசவாளர்கள் வாழ்வில் ஒளியேற்றியுள்ளது.

இந்த ஆண்டு, இலவச வேட்டி சேலை உற்பத்தியினை முன்கூட்டியே தொடங்கியுள்ளதற்கும், விசைத்தறி நெசவாளர்களுக்கு நெசவு கூலி உயர்வு வழங்கியுள்ளதற்கும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்களையும் மனதார பாராட்டி, தங்களது கோடான கோடி நன்றியினை தெரிவித்துக் கொண்டுள்ளனர்.



## தி.மு.க. இளைஞர் அணி

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 05.07.2025 சனிக்கிழமை | காலை 09.30 மணி | திண்டுக்கல் கிழக்கு | ஏ.எம்.எஸ்.மஹால், தாடிக்கொம்பு சாலை, திண்டுக்கல். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 02.07.2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி.

## கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் – நாகர்கோவில் மாநகர மேற்குப் பகுதி

# 13வது பூத் பெருவிளையில் “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை முகாம்!

### மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

கன்னியாகுமரி, ஜூலை 5 -

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி, நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதியில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் அவர்களின் தலைமையில் அவரது சொந்த வார்டான 4 வது வார்டு, 13 வது பூத் பெருவிளையில் “ஓரணியில் தமிழ்நாடு”உறுப்பினர் சேர்க்கையை துவக்கி வைத்து கழக கொடியினை ஏந்திய வண்ணம் ஒவ்வொரு இல்லத்திற்கும் நேரில் சென்று கழக அரசின் நான்காண்டு சாதனைகளை பொது மக்களிடம் எடுத்துக் கூறி புதிய உறுப்பினர்கள் கழகத்தில் சேர்க்கப்பட்டனர்.

நிகழ்வில் நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி செயலாளர் மு.சேக்மீரான், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் முகம்மது பஷீர், தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் தெய்வேந்திரன், பாலா, நாகர்கோவில் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் மோகன் ராஜ் உட்பட கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி பாக முகவர் (BLA2), வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (BDA), பாக குழு உறுப்பினர்கள் (BLC), கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி, நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதியில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் அவரது சொந்த வார்டான 4 வது வார்டு, 13 வது பூத் பெருவிளையில் “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கையை துவக்கி வைத்தார். நிகழ்வில் நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதிச் செயலாளர் மு.சேக்மீரான், முகம்மது பஷீர், தெய்வேந்திரன், பாலா, மோகன் ராஜ் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## தி.மு.க. இளைஞர் அணி

### முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஏ.ஆர்.கே.ஹக்கீம் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு கோவை வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர்களிலும் தெருமுனைக் கூட்டங்கள் ஏற்கெனவே தொடங்கி நடைபெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக அடுத்து நடைபெறவுள்ள தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 11.7.2025 | சரவணம்பட்டி பகுதி | அஞ்சுகம் நகர் | சேலம் சுஜாதா ரா.குமுத ஸ்ரீ |
| 2 | | சின்னவேடம்பட்டி பகுதி | சின்னவேடம்பட்டி சந்திப்பு | சேலம் சுஜாதா ரா.குமுத ஸ்ரீ |
| 3 | | விளாங்குறிச்சி பகுதி | விளாங்குறிச்சி நியாயவிலைக் கடை அருகில் | சேலம் சுஜாதா ரா.குமுத ஸ்ரீ |
| 4 | | காளப்பட்டி பகுதி | நேரு நகர் பேருந்து நிறுத்தம் | சேலம் சுஜாதா ரா.குமுத ஸ்ரீ |
| 5 | 13.7.2025 | கவுண்டம்பாளையம் பகுதி | அசோக் நகர் கீழ்ப்பகுதி | கோவை துரைமுருகன் சி.கவின்குமார் |
| 6 | | இடையர்பாளையம் பகுதி | அண்ணா திடல், இடையர்பாளையம். | கோவை துரைமுருகன், சி.கவின்குமார் |
| 7 | 14.7.2025 | கூடலூர் நகரம் | கவுண்டம்பாளையம் பாயிண்ட் | குமரி பிரபாகரன் ப.விஜயராஜ் |
| 8 | | வீரபாண்டி பேரூர் | விநாயகர் கோயில் திடல் | குமரி பிரபாகரன் ப.விஜயராஜ் |
| 9 | | பெரியநாயக்கன் பாளையம் பேரூர் | ஐந்து முக்கு, பெரியநாயக்கன் பாளையம் | குமரி பிரபாகரன் ப.விஜயராஜ் |
| 10 | | நரசிம்மநாயக்கன் பாளையம் பேரூர் | பேருந்து நிலையம், நரசிம்மநாயக்கன் பாளையம் | குமரி பிரபாகரன் ப.விஜயராஜ் |
| 11 | 17.7.2025 | ஆலாந்துறை பேரூர் | கருமாரியம்மன் கோயில் மைதானம் | கரூர் முரளி ஏ.ஆட்லின் |
| 12 | | தென்கரை பேரூர் | கரடிமடை | கரூர் முரளி ஏ.ஆட்லின் |
| 13 | | பூலுவப்பட்டி பேரூர் கழகம் | கிளியகவுண்டன் பாளையம் | கரூர் முரளி ஏ.ஆட்லின் |
| 14 | | பேரூர் பேரூர் | பேரூர் கோயில் மைதானம் | கரூர் முரளி ஏ.ஆட்லின் |
| 15 | 18.7.2025 | பெரியநாயக்கன் பாளையம் கிழக்கு ஒன்றியம் | காந்தி குடியிருப்பு, அசோகபுரம் | கரூர் முரளி ப.விஜயராஜ் |
| 16 | | சர்க்கார் சாமக்குளம் ஒன்றியம் | லட்சுமி கார்டன், கொண்டயம்பாளையம் | கரூர் முரளி ப.விஜயராஜ் |
| 17 | | சர்க்கார் சாமக்குளம் பேரூர் | பேருந்து நிலையம், சர்க்கார் சாமக்குளம் | கரூர் முரளி ப.விஜயராஜ் |
| 18 | | இடிகரை பேரூர் | ஐ.ஓ.பி. வங்கி அருகில், இடிகரை. | கரூர் முரளி ப.விஜயராஜ் |

**கோயம்புத்தூர்**
நாள் : 03.07.2025

கலைஞர் 100 1924 - 2023



## கிளியனூர் மேற்கு ஒன்றியத்தில் புதிய உறுப்பினர் சேர்க்கை!

விழுப்புரம், ஜூலை 5 –

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் மத்திய மாவட்டப் பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா. இலட்சுமணன் விழுப்புரம் மத்திய மாவட்டம், வானூர் சட்டமன்ற தொகுதி, கிளியனூர் மேற்கு ஒன்றியம், கண்டமங்கலம், பூத் எண் 11ல் புதிய உறுப்பினர் சேர்க்கை முகாமை துவக்கி வைத்தார்.

இதில் ஒன்றியச் செயலாளர்கள் K.R.S.இராஜி, S.புஷ்பராஜ், மாரிமுத்து Ex.MLA., முன்னாள் ஒன்றிய குழுப் பெருந்தலைவர் V.M.R.சிவா, மாவட்டப் பிரதிநிதி அ.குழந்தைவேலு, மாவட்டக் கவுன்சிலர்கள் பிரேமா குப்புசாமி, T.கௌதம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் A.K.தேவேந்திரன், மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் G.வேலு, ஒன்றிய துணை செயலாளர்கள் J.குப்புசாமி, அய்யம்மாள் சுப்பிரமணி ஒன்றிய பொருளாளர் M.பழனி, ஊராட்சிமன்ற தலைவர்கள் C.சிவக்குமார், சித்ரா, துணைத்தலைவர் பார்வகீர்த்தனா விநாயகமூர்த்தி, ஒன்றிய இளஞர் அணி அமைப்பாளர் E.செந்தில், ஒன்றியக் கவுன்சிலர் T.செல்வக்குமார், ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் C.கலிய பெருமாளர், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் R.உத்திரகுமார், தொகுதி ஒருங்கிணைப்பாளர் விஜயகுமார், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பிரசாத், கிருபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

## தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

### தஞ்சை மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணியின் **தஞ்சை மத்திய மாவட்டம்** - தஞ்சை மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**தஞ்சை மத்திய மாவட்டம்**

**தஞ்சை மாநகரம்**

அமைப்பாளர் - க. மனோஜ்குமார் வடக்கு அலங்கம், தஞ்சாவூர்.

துணை அமைப்பாளர்கள் - 1) ப.மாவீரன் (எ) ஹரிகரன் மேல் லயன், வடக்கு வாசல், தஞ்சாவூர். 2) ரா. தாமோதரன் கீழத் தெரு, டவுன் கரம்பை, தஞ்சாவூர். 3) சோ. பாபுராஜ் 2வது தெரு, அண்ணா நகர், தஞ்சாவூர். 4) அ. அலெக்ஸ்பாண்டியன் ஆரோக்கியமாதா கோவில் தெரு, எம். சாவடி, தஞ்சாவூர். 5) மோ. முத்தமிழ் 6வது தெரு, காவேரி நகர் மேற்கு, தஞ்சாவூர்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 03-07-2025.

**அன்னியூர் சிவா**
செயலாளர்
தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

## சேலத்தில் – தி.மு.க. அயலக அணி

# மாநில - மாவட்ட நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

### தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளம் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, திமுக அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி முன்னிலையில், எனது (தி.மு.க. அயலக அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா) தலைமையில், 08.07.2025 செவ்வாய்க் கிழமை, காலை 10.00 மணி அளவில், தி.மு.க. அயலக அணி மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம், சேலம், அருணாச்சலம் தெரு, காந்தி சிலை அருகில் உள்ள “நேரு கலையரங்கில்” அயலக அணி பொறுப்பாளரும் - கழக துணை பொதுச் செயலாளருமான திருச்சி சிவா எம்.பி. கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றிட நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சரும் - சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளருமான இரா.இராஜேந்திரன் - சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம். செல்வகணபதி எம்.பி. - சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி மற்றும் கழக அயலக அணி இணை - துணைச் செயலாளர்கள் டாக்டர் செந்தில்குமார், வழக்கறிஞர் மனோராஜ், சண்முகசுந்தரம், வழக்கறிஞர் புகழ்காந்தி, துணைச் செயலாளர்கள், சேலம் உமாராணி, வழக்கறிஞர் பரிதிஇளம்சுருதி, வழக்கறிஞர் கன்னிகை ஜி.ஸ்டாலின், விஜயன் ராமகிருஷ்ணன், முத்துவேல் ராமசாமி, சேகர் ஜெய் மனோகரன், குமரி ஏ. பாபு வினிபிரேட், ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது,

மாநில மற்றும் மாவட்ட அயலக அணி நிர்வாகிகள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**பொருள்** : (1). கழக ஆக்கப்பணி, (2). 2026 - சட்டமன்றத் தேர்தல்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 03-07-2025.

**எம்.எம்.அப்துல்லா**
செயலாளர்
தி.மு.க. அயலக அணி